# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண்.58/2022**

பெயர்: **பாலு** நாள்: 20.11.2025

வா.சா.1 – 2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – பாலு - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 01.00

Ex.A1 ஆவணமானது 2-ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பின்னிட்டு உருவாக்கப்பட்டது என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல, கடந்த 08.02.2019 தேதியன்றே கிரையம் ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தப்பட்டது. Ex.A1 ஆவணமானது 2-ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல. Ex.A1 ஆவணத்தில் 3-ம் தாளில் உள்ள கையொப்பம் மற்றும் கைரேகை என்னால் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றால், சரியல்ல.

Ex.B1 ஆவணத்தில் உள்ள சாட்சியை மாற்றுவதற்காக Ex.A1 ஆவணத்தில் உள்ள 3-ம் தாள் மாற்றப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. Ex.A1 ஆவணத்தில் நான் சொல்லிய தேதியில் சொல்லியவாறு தயாரிக்கப்பட்ட ஆவணமல்ல என்றால், சரியல்ல. Ex.A1 ஆவணமானது நிராகரிக்கப்பட வேண்டிய ஆவணம் என்றால், சரியல்ல. இந்த வழக்கானது செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம்: 01.10

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2025.11.20 18:00:02 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.